

# தலைவரின் கடிதம

டான்ஸ்ரீ சாவ் ஹுவாட் லாய்

# தலைவரின் கடிதம

## கடுமையான சவால்களை எதிர்கொள்ள ப்ரு தேவை

மதிப்பிற்குரிய பங்குதாரர்களே,

அண்மையில் முடிவுற்ற நிதியாண்டு அறிக்கையில் நான் விளக்கியிருந்தது போல், கடந்த ஆண்டு இந்த துறையும் GABயும் நிறைய சவால்களை எதிர்நோக்கியதுடன் மிகவும் கடுமையாக அழுத்தப்பட்டது. ஆனாலும் இதன் காரணமாக நாம் துவண்டு விடவில்லை என்பதைக் கூறிக்கொள்வதில் நான் பெருமை அடைகிறேன். இந்த கடுமையான சூழலை எதிர்கொள்ள சிறப்பானதொரு மதுவகையைத் தயாரித்ததன்வழி சவால்களை மீண்டும் நாம் எதிர்கொண்டோம். இதற்கு நமது விசுவாசமான வாடிக்கையாளர்கள், நிதியாளர்கள், ஊழியர்கள் மற்றும் எல்லாவற்றுக்கும் மேலாக எங்கள் மதிப்பிற்குறிய பங்குதாரர்களாகிய நீங்கள் வழங்கிய வற்றாத ஆதரவே காரணம் ஆகும்.

நாம் 2004ஆம் நிதியாண்டில் காலடி வைத்த சில மாதங்களில் 2005ஆம் ஆண்டு பட்ஜெட்டில் நமது மதுபானத்திற்கு எப்பொழுதும் இல்லாத அளவு வரியை அரசாங்கம் விதித்தது. இந்த எதிர்பாராத 26.7 விழுக்காடு வரி உயர்வானது, இந்த துறையின் மீதும் உங்கள் நிறுவனத்தின் மீதும் கருமேகமாய் சூழ்ந்தது. இதன் முழுமையான தாக்கம் சில மாதங்கள் கழித்துதான் உணரப்பட்டது என்றாலும் அது விளைவிக்கக் கூடிய பாதிப்பு அதற்கு முன்பே தெளிவாகத் தெரிந்து விட்டது எனலாம்.

இந்த அசாதாரணமான உள்நாட்டு வரியினால், வரி செலுத்தப்பட்ட மால்டா மதுபான விற்பனை அளவு 6 விழுக்காடு குறைந்தது. இச்சரிவானது இச்சந்தைக்குப் பெருத்த சேதத்தை ஏற்படுத்தியது. ஆண்டுதோறும் 2 விழுக்காட்டு வளர்ச்சியை நிலைநிறுத்துவதற்கு கடந்த சில ஆண்டுகளாக முயன்று வரும் இத்துறைக்கு இது ஒரு குறிப்பிடத்தக்க வீழ்ச்சி என்றே கூறவேண்டும்.

எவ்வாறாயினும், GAB தமது பெரிய ஒருங்கமைப்பின் முயற்சிகளையும் பயனளிக்கும் நடவடிக்கைகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வந்தது. புதிய பயனீட்டாளர்களைக் கவரும் நோக்கத்தில், சில புதிய வகை மதுபானங்களை அறிமுகப் படுத்தியதன் மூலம் நமது வாணிப அறிமுக நடவடிக்கைகளை மேலும் துரிதப்படுத்தினோம். அதன் வழி பீர் மற்றும் ஸ்டவுட் ஆகிய இவ்விரண்டு துறையில் GAB ஒரு சிறந்த வர்த்தக மேம்பாட்டை அடைந்தது. மதுபான சந்தையைப் பொருத்த மட்டில் இன்றுவரை கின்னஸ், டைகர் மற்றும் ஹெனிக்கன் ஆகிய மூன்றும் நட்சத்திரங்களாகத் தொடர்ந்து மின்னுகின்றன.

# தலைவரின் கடிதம



கடுமையான விதிமுறைகளை எதிர்கொள்ளும் பொருட்டு அடைக்கப்படும் பொருட்கள் சோதனைச் செய்யப்படுகின்றன.



ஸ்டவுட் சந்தையில் GAB பெரும் பங்கை வகிக்கிறது.

# தலைவரின் கடிதம

நமது பல்வேறு வகை தயாரிப்பு பொருட்களாலும் நமது வாரியம் மற்றும் நிர்வாகக் குழுவினரின் உறுதியான முயற்சிகளாலும், GAB கடந்த ஆண்டைக் காட்டிலும் அதிக வலுவுடன் ஒரு லாபகரமான நிறுவனமாக உருவாகியுள்ளது. மொத்த விற்பனை அளவில் கடந்த நிதியாண்டைக் காட்டிலும் 7.4 அதிகமாக அதாவது 9521.11 மில்லியன் ரிங்கிட்டை அடைந்துள்ளது. இதன் வரிக்கு முந்திய லாபம் 140.52 மில்லியன் ரிங்கிட் ஆகும். இது 2004ஆம் நிதியாண்டில் கிடைக்கப்பெற்ற 129.25 மில்லியன் ரிங்கிட்டுடன் ஒப்பிடும் போது 8.7 விழுக்காடு அதிகமாகும்.

உற்சாகமிக்க இறுதியாண்டு முடிவைக் கருத்தில் கொண்டு உங்கள் இயக்குநர் வாரியம் மலேசிய வருமான வரியின் 28மூ எனும் குறைந்த பட்ச யூனிட்டிற்கு சராசரி 50 காசு அடிப்படையில் 29 காசு இறுதி லாப ஈவை மகிழ்ச்சியுடன் பரிந்துரை செய்கிறது. இந்த நிதியாண்டின் மொத்த குறைந்த பட்ச யூனிட்டிற்கு சராசரி 50 காசு அடிப்படையில் 41 காசுஆகும். குறைந்த பட்ச யூனிட்டிற்கு சராசரி 50 காசு அடிப்படையில் 38 காசு என்று கடந்த நிதியாண்டில் வழங்கப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இத்தகு கடுமையான சவால்களை நமது GAB எதிர்கொள்ளும் வகையில் நமது ஒருங்கமைப்புகளின் நடவடிக்கைகள் மற்றும் ஆக்கப்பூர்வத் தன்மைகள் மேலும் செம்மைப் படுத்தப்பட்டுள்ளன. சாதகமற்ற சந்தை சூழ்நிலையை சமாளிக்க பல கவர்ச்சிகரமான புதிய தயாரிப்பு வகைகளை வெளியிட முதலீடுகள் உதவியுள்ளன.

தனது பங்குதாரர்களின் மதிப்பை உயர்த்துவதில் பிரசித்தி பெற்றது GAB. அந்த வகையில், அண்மையில் 2004 ஆம் ஆண்டு KPMG பங்குதாரர் மதிப்பு விருதளிப்பில் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களில் நமது நிறுவனம் நான்காவதாக வந்துள்ளது. மேலும் பயனீட்டாளர் சந்தைப் பிரிவில் முதல் மூன்று வெற்றியாளர்களின் வரிசையில் இடம்பெற்றுள்ளது. மலேசியாவில் உள்ள சிறந்த 100 பட்டியலிடப்பட்ட நிறுவனங்களுக்கு இடையே பங்குதாரர்களின் மதிப்பை உயர்த்துவது குறித்து நடத்தப்பட்ட ஆய்வினை அடிப்படையாகக் கொண்டு இந்த சிறப்பு விருது வழங்கப்பட்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளாக பயனீட்டாளர் சந்தைப் பிரிவில் தலைசிறந்த மூன்று நிறுவனங்களில் ஒன்றாகவும் ஒட்டுமொத்த பிரிவில் முதல் நான்காவது இடத்தில் நமது நிறுவனம் இருக்கிறது என்பது ஒரு சிறந்த சாதனையாகும்.

# தலைவரின் கடிதம

எனினும் நாம் வெற்றிக் களிப்பில் ஓய்ந்து விடலாகாது. நாம் ஒன்றை நன்றாக கூர்ந்து கவனித்தால் இது வரக் கூடிய சவால்களுக்கு எல்லாம் ஓர் ஆரம்பம் என்பது நமக்கு புரியும். குறிப்பாக அரசாங்கம் அன்மையில் அறிவித்துள்ள பாதுகாப்பு மைமுறை அமலாக்கம் என்பது இத்துறைக்கும் புயுடீக்கும் பெரிய பின்னடவை ஏற்படுத்தக் கூடும். ஆகவே நாம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேம்படுத்துவது அவசியமாகும். இதனிடையே இன்னும் பல நடவடிக்கைகளை நாம் மேம்படுத்த வேண்டும். மற்றும் சில புதிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அவற்றுள் ஆட்டோமேசன், திட்டமிட்டு செயல்படுதல் போன்றவை அடங்கும்.

கடந்த ஆண்டு எப்போதுமில்லாத அளவு விதிக்கப்பட்ட வரியின் தாக்கமானது இந்த நடப்பு நிதியாண்டின் எஞ்சிய காலக் கட்டத்தில் பல சவால்களை ஏற்படுத்தும் சாத்தியமுள்ளது. நேரடி விற்பனைத் துறை தொடர்ந்து இறங்கு முகமாக இருக்கும் என்று எதிர்ப்பார்க்கின்ற வேளையில் உள்நாட்டு வரி மேலும் உயர்த்தப்பட்டால் உள்ளூர் பீர் மற்றும் ஸ்டவுட் ஆகியவற்றுக்கு அது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

சவால்மிக்க சந்தையில் கடுமையான போட்டிகளும் நிறைந்த இத்துறையானது எதிர்காலத்தில் மேலும் சிக்கலான பிரச்னைகளை எதிர்கொள்ள நேரிடலாம். இருந்த போதிலும், மலேசிய பீர் மற்றும் ஸ்டவுட் சந்தையில் மதிப்பு, லாபகரமான வாணிபம், விற்பனை அளவு மற்றும் பங்குதாரர்கள் ஆகியவற்றில் ஈடு இணையற்ற சந்தை தலைவராக வேண்டும் என்ற நமது இலக்கை நோக்கி தொடர்ந்து பாடுபடுவோம்.

உங்கள் நிறுவனமானது வாணிப மற்றும் நிதி நடவடிக்கைகளை தொடர்ந்து மேம்படுத்துவோம் என்ற தனது வாக்குறுதியை ஜூன் 2005யில் முடிவுற்ற கடந்த நிதியாண்டில் நிறைவேற்றியுள்ளது. இச்சாதனையானது மிகவும் பாராட்டத்தக்கது. அனைத்து தரப்பினரின் ஒத்துழைப்பின்றி இது சாத்தியமாகி இருக்காது. வாரிய தலைவர்களின் சார்பாக GAB குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் நான் நன்றி கூறும் அதே வேளயில் தொடர்ந்து ஆதரவு நல்கி வரும் வாடிக்கையாளர்கள், விநியோகிப்பாளர்கள் மற்றும் பங்குதாரர்கள் அனைவருக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

மகிழ்ச்சியுடன் மற்றுமொரு சிறந்த ஆண்டை வரவேற்போம் !



டான்ஸ்ரீ சாவ் ஹுவாட் லாய்
தலைவர்
20 September 2005

# தலைவரின் கடிதம




ViVA! ViVA! ViVA!